6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

41. 1935-ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 12 நவம்பர் 1992-ஆம் நாளிட்ட 396-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1935-ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தயச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

42. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிமப் பொருள்கள் சலுகைகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து தொழில் துறையின் 16 ஜுன் 1994-ஆம் நாளிட்ட 166-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1957-ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமப் பொருள்கள் (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 28 (1) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

43. சில துறைகளில் உள்ள சில அதிகாரிகளுக்கு அதிகாரங்களை வழங்குவது குறித்து, தொழில் துறையின் 16 ஜுன் 1994-ஆம் நாளிட்ட 167-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1957-ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமப் பொருள்கள் (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 28 (1) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

44. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1992-93-ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

45. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1990-91-ஆம் ஆண்டுக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1978-ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

46. 1993-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வணிகம் எண். 1) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்).

1994 நவம்பர் 7]

47. 1992-93-ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் எண். 2) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

13. தமிழ்நாடு மின் வாரியத்தின் 1994-95-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை விவர அறிக்கை மற்றும் 1993--94-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விவாதங்களைத் தொடங்கி வைத்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் ஆற்றிய உரை.

14. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை, 1994-95.

15. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கை, 1994-95.

16. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை, 1994-95.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS